Registered as a News paper in Ceylon விலை சதம் 15

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

நூல் பெகிடி எண் 49
பதிவு எண் 389
தேசிய தினசரி
மலர் 14
இதழ் 127

யாழ்ப்பாணம் ஆனி 3 ரபி அவ்வல் 4 வெள்ளிக்கிழமை (16-6-78)

அழகு மிளிர அணியும்சுகத்திற்கு
மகிழ்ச்சியர்களுக்கான
★ மணிப்புரி
★ நைலெக்ஸ்
★ வொயில்
★ கைத்தறி சாறீல்
வாங்குக
ராஜ்கோபால்ஸ்
(பிரபல ஜவுளி நாளிகை)
பெரியகடை — யாழ்ப்பாணம்

இந்தியா செல்லும் இலங்கையருக்கு

சி.ஐ.டி. விசாரணையின் பின்பே பிரயாண அனுமதி கிடைக்கும்

காலதாமதத்தைத் தவிர்க்க முன்கூட்டியே விண்ணப்பிக்கவேண்டும்

யாழ்ப்பாணம் வெள்ளி

இந்தியாவுக்கு பயணம் செய்வதற்கு விண்ணப்பிப்பவர்கள் பற்று, பதினைந்து நாட்களுக்கு முன்னர் தங்கள் விண்ணப்பத்தை அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

இந்தியாவுக்கு பயணம் செய்வதற்கு விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பங்களை தப்பறியும் பொலிஸ் பிரிவினருக்கும் அனுப்பிவைக்கும்படி வடபகுதி பொலிஸ் பொலிஸ் தலைமைக் காரியாலயத்தினரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதால், இதனால் ஏற்படக்கூடிய காலதாமத்தைத் தவிர்க்கும் பொருட்டே, புறப்படுவதற்கு பல தினங்களுக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பும்படி பொலிசார் கேட்டுக்கொள்ளுகின்றனர்.

இந்தியாவுக்கு புறப்படுவோர் தங்கள் விண்ணப்பங்களை அரசாங்க அதிபருக்கு இதுவரை அனுப்பிவந்தனர். அரசாங்க அதிபர் விண்ணப்பங்களை பொலிசாருக்கு அனுப்பி, அவர்களின் விசாரணை முடிவடைந்ததும், நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான அனுமதியை வழங்கிவந்தார். பொலிசாரும் விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதும், சம்பந்தப்பட்டவர்களின் வீடுகளுக்கு சென்று அவர்கள் பற்றிய தகவல்களை ஒரு கிழமைக்குள் சேகரித்து, அரசாங்க அதிபருக்கு அனுப்பி வந்தார்கள். இது கிடைக்கப்பெற்றதும் அரசாங்க அதிபர் நாடியிலிருந்து வெளியேறும் அனுமதியை வழங்கி வந்தார். இப்போது பொலிஸ் தலைமைக் காரியாலயத்திலிருந்து வடபகுதி பொலிசாருக்கு கிடைக்கப்பெற்றுள்ள உத்தரவொன்றில் வடபகுதியிலிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டு செல்வதற்கு விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பங்களை சி ஐ டி பிரிவினருக்கும் அனுப்பிவைக்கும்படியும், சி ஐ டி விசாரணை முடிவுகள் கிடைக்கப்பெற்ற பின்னரே வடபகுதி பொலிசார், அரசாங்க அதிபருக்கு அந்த விண்ணப்ப விசாரணை முடிவுகளை அனுப்பவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சொழுபு சி ஐ டி பிரிவினருக்கு விண்ணப்பங்களை

(6-ம் பக்கம் பார்க்க)

வல்வெட்டியைச் சேர்ந்த

5 மாணவர்கள் மீது பொலிஸ் விசாரணை

வல்வெட்டித்துறை-விநாயகர் குடியரசுத்தினத்தன்று தேர்ப்புக்கொடி கட்டினார்கள் என்றும் பாடசாலை மாணவர்களை சென்னைக்கு தடுத்தார்கள் என்றும் சந்தேகத்தின் பேரில் இப் பகுதியைச் சேர்ந்த 5 மாணவர்கள் பொலிசாரினால் விசாரணை செய்யப்பட்டனர்.

பாடசாலைக்குச் செல்லவிடாது தன்மகனை குறிப்பிட்ட 5 மாணவர்கள் தடுத்தார்கள் என்று இப்பகுதியைச் சேர்ந்த ஒரு பிரமுகரால் பொலிசில் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து இந்த மாணவர்கள் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்கள் 5 பேரும் வல்வை இந்து வாலிபர் கழகத்தை மாணவர்கள் என்று தெரிகிறது.

இ. போ. ச. பருத்தித்துறை டிப்போ

பஸ் ஊழியர்கள் தேர்தலைப் பகிஷ்கரித்தனர்

யாழ்ப்பாணம். வெள்ளி

இலங்கைப் போக்குவரத்துச் சபை பருத்தித்துறை டிப்போ ஊழியர்கள் தேர்தலைப் பகிஷ்கரித்து எவரும் நியமனங்கள் தாக்கல் செய்யாது விட்டுவிட்டனர்.

பருத்தித்துறை டிப்போ ஊழியர் மன்றத் தேர்தலுக்கான நியமனங்கள் கோரப்பட்டபோது ஊழியர் எவரும் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்யவில்லை.

ஒவ்வொரு வருடமும் தேர்தல் நடந்தோர் உத்தியோகத்தர்களால் இத்தேர்தல் நடத்தப்படும். கடந்த வருடம் நடந்த தேர்தலில் டிப்போ ஊழியர்கள் பங்கு பற்றினார்கள்.

இனி நோக்கி டிப்போ

இ. போ. ச இனிநோக்கி டிப்போ ஊழியர் மன்றத்தினது எல்லைப் பிரிவிலிருந்தும் ஏகமனதாக உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டனர்

(6-ம் பக்கம் பார்க்க)

தமிழர் கூட்டணி

நடவடிக்கைக் குழு 25-ம் திகதி கூடும்

யாழ்ப்பாணம். வெள்ளி

தமிழர் கூட்டணி நடவடிக்கை குழுக்கூட்டம் இம்மாதம் 25-ம் திகதி காலை யாழ்ப்பாணத்தில் நடைபெறுமென தமிழர் கூட்டணி எம். பி. திரு எஸ். சிறிசபாரத்தினம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் காங்கிரஸ் தலைமை காரியாலயத்தில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் கூட்டுழிழுக்கு மாவை எம். பி. கலந்துகொள்வார்கள்.

தேசிய பேரவையை பகிஷ்கரிப்பதா? இல்லையா என்பதுபற்றியும், சத்தியப்பிரமாணம் எடுப்பதா இல்லையா? என்பது பற்றியும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படவிருக்கிறது.

இக்கூட்டத்தில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ஜி ஜி பொன்னம்பலமும் கலந்து கொள்வார் என கூட்டணி பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். கூட்டங்களுக்கு நடவடிக்கைகள் பகிரங்கமாக கூடிய நடைபெறுமென்றும் அவர் கூறினார்.

தமிழரசுக்கொதுச்சபை

தமிழரசுக் கட்சிபொதுச் சபை இம்மாதம் 24-ம்திகதி யாழ்ப்பாணத்தில் கூடுகிறது.

தமிழரசுக்கட்சி தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் தற்போதைய அரசியல் நிலையைற்றி ஆலோசிக்கப்படும்.

வாரம்தோறும் பாடசாலை விடுமுறை, தேசியக்கொடி தூக்குவது பற்றி தமிழ்ப் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது

வடக்குக் கிழக்கு மாவட்டங்களில் உள்ள தமிழ் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்களை நியமிப்பதற்கு எடுக்கப்படுவரும் நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்படுமென்று பொதுச்சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்

புதிய அரசியல் திட்டத்தை எதிர்த்து எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

தொண்டமானாறு

கடலில் மாண்டவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது

கடற்படை வீரர் நிமாண்டில்

வல்வெட்டித்துறை, விநாயகர் கடலில் வைத்தக் கடற்படையினரால் கடலோரப்பகுதியாகக் கருதப்படும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இரத்தினசாமி என்பவரின் சடலம் விசாரணைக்கு உறவினரிடம் வையிக்கப்பட்டது. இம் மரணத்தைத் தொடர்ந்து கடற்படையைச் சேர்ந்த வீரர் ஒருவரதும் இம்மாதம் 23-ம் திகதிவரை பொலிஸ் பாதுகாப்பில் வைக்கும்படி வல்வெட்டித்துறை மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார். வல்வெட்டித்துறை மாவட்ட நீதிபதி சிவானந்தம் பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

இறந்தவரின் நெஞ்சிலும் வயிற்றிலும் துப்பாக்கிச்சூடு பேன்ற காயங்கள் இருந்தன பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது.

உதவிப் பொலிஸ்ப்பரிசுடன் திரு. எஸ். எல். விஜயசூரியா காங்கேசன்துறை பொலிஸ் தலைமைப்பிரிவு இன்ஸ்பெக்டர் திரு பி இராஜேஸ்வரன் இன்ஸ்பெக்டர் கே. ஆர். இராமச்சந்திரன் ஆகியோரும் விசாரணையின் போது சமுகமளித்திருந்த மல்லாகம் மாஜிஸ்ட்ரேட்திரு சிவானந்தம் பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

இறந்தவரின் சடலத்தை இரண்டு நாட்கள் தீவிர தேடுதலின் பேற்ற மாலை கார் 6 மணியளவில் கடற்படை கழிவோடிகளும் சேர்ந்து தூக்கும்தகவிட வல்வெட்டித்துறை முன்பகுதிக்கு கிட்டக் கண்டுபிடித்தனர்.

கடற்படையினரின் துப்பாக்கியும் மிக்கிளக்கோன் ரும் இச் சம்பவத்தில் காணாமல் போனதாகக் கருதப்படுகிறது. கடலில் கழிவோடுகளில் இரு பொலிசாரும் காவலாக இருந்தனர்

[5-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்ஸ் சினிமா
மல்லாகம்
தினசரி 6-30 இரவு 9-45
சனி ஞாயிறு 2-30
சிவாஜிராஜ பாலைதர் நடித்த
திருநீலகண்டன்
(புதிய கொப்பி)
தினசரி 4-30 மணிக்கும்
DEATH OF A GUN FIGHTER

REGAL (Jaffna)
Daily 5-15 & 7-15 p.m.
Ken Clarke, Helga Lime
in
MISSION BLOODY MARY
(Technicolor-adults only)
தினசரி 2-00 இரவு 9-45
எம். ஜி. ஆர் - சாவித்திரி நடித்த
மகாதேவி

யாழ் தியேட்டர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30 இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர் - பானுமதி நடித்த
மலைக்கள்ளன்

நியூ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
சனி ஞாயிறு பி ப 2-30
ராஜன் - ஜெமினி
சௌகார் ஜானகி நடித்த
சக்கரம்

RAJAH — JAFFNA
Daily 10-30 a.m., 4-45, 7-00 & 9-45 p.m.
Steve Mcqueen - James Garner
in
THE GREAT ESCAPE
(Scope & Color)

ராணி சிவாஜி கணேசன் - ஜெயலலிதா
[யாழ்ப்பாணம்] சுந்தராஜன்—பாலாஜி
தினசரி 2-30 6-30 மற்றும்பலர் நடித்த
மஜாதாவின் **ராஜா** (வர்ணத் திரைப்படம்)
தினசரி காலை 10-30 இரவு 10-00
நான் யார் தெரியுமா?

விஸ்லர் ரவிச்சந்திரன்-கே. ஆர். விஜயா
[யாழ்ப்பாணம்] நாகேஷ்-டி. கே. பகவதி
தினசரி 4 காட்சிகள் நடித்த
சபதம்

உங்கள் வெகுநாள் ஆசையைப் பூர்த்தி செய்ய!
இப்பொழுது திரையிடப்படுகிறது!
வெலிங்டன் (யாழ். நகர்) **லிமிடேட்**
தினசரி பி. ப. 2-30 தினசரி காலை 10-00
காலை 6-30 இரவு 10-00 பி. ப 2-00 காலை 6-00
சனி, ஞாயிறு காலை 10-30 இரவு 9-30
மற்றும்
கெபிடல் (கொழும்பு) **பிளாஸா**
நிலையங்களில்
★ சிவாஜி ★ ஜெயலலிதா
★ பாலாஜி ★ நிர்மலா
★ சோ ★ கருணாநிதி ★ தேங்காய் சீனிவாசன்
மற்றும் பலர் நடித்தது:
ஜேயார் மூவீஸ்
எங்க மாமா
[சக்திமெகா வர்ணச் சித்திரம்]

வரிவிளம்பரம்

சாப்டிங்ஸ் 1 தொடக்கம் 7 அங்குலம் வரைக்கும் (M. S. Shaftings) வேண்டிய அளவுகளில் மலிவாகக் கிடைக்கும். ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5050

விற்பனைக்கு
ஆயர்பாடி புதுவருட இராசிப்பலன் ரூபா 1/50. விற்பனையாளர்கள், கொழும்பில் கீழ்க்காணும் இடங்களில் உண்டு. கிரீன்லன்ட் பம்பலப்பிட்டி, ஜந்தாம்படி, கிருஷ்ணா, கொள்ளுப்பிட்டி. 5075

சந்தர்மடம்சந்தி மயிலிவிதியில் உள்ளதும் நீதிமன்றத்திலும் பிரிவிடுதல் செய்யப்பட்டதுமான வீடுடன் கூடிய நாலுபரப்புக் காணியும், வீடுள்ளாத 22/3 பரப்புக்காணியும் உடனடி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திரு. முருகரத்தினம், 109, மயிலிவிதி, சந்தர்மடம். 5090

சொந்தப்பாவிப்பிலுள்ள 8. எக்ஸ் லாரி கோரிக்கை மனுவர் லார் விற்பனைக்கு இருக்கின்றது. விபரம்: ஸ்ரீ சாந்தா ஆச்சரம், யாழ்ப்பாணம். 5092

பரந்தன்-கண்டி வீதியில் ஆனை ஏக்கர் காணி வீட்டுடன் வற்றாத நல்ல தண்ணீர் கிணறு வசதியுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: வரராசா, 163, கோவில் வீதி, நல்லூர். 5094

தேவை
ஸ்பிறே பெயின்ரிங் வேலை செய்வதில் அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புகிறவர்களும், மனேச்சர் விநிதர் முதலிய வேலையில் திறமையுடன் கடமையாற்ற கடியவர்களும் உடன் தேவை வேண்டும் விரும்பத்தக்கது. நேரில் வரவும். நடராஜா ராஜ் 87, A, மருதடி தெற்கு வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 5093

[illegible] பிரபல [illegible] ஹோட்டலுக்கு அனுபவம் வாய்ந்த வெயிட்டர்கள் உடன்தேவை. விபரமாக தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும். பொ. செல்வத்துரை, 68/5 இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம். 5095

சாந்தி சங்கானை
தினசரி 6-30, 9-30
ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா நடித்த
குடியிருந்த கோயில்
வெள்ளி சனி 4-15
THOMAS CROWN AFFAIR
வயது வந்தவர்களுக்கு

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
சிவாஜி - தேவிகா நடித்த
நீலவானம்

பவானி சினிமா
மூளாய்
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெமினி-கே. ஆர். விஜயா
மாஸ்டர் ராஜ்குமார் நடித்த
ராமு

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45 pm
Sat. Sunday 10-30
Alfred Hitchcock's
PSYCHO
(Strictly for adults)

கல்வி

சிங்கள வகுப்பு மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை ஆசிரியரால் நடத்தப்படும். மாணவர்களுக்கு விஞ்ஞான பாடங்களும் கற்பிக்கப்படும். விபரங்களுக்கு செல்வி S. ஆசைப்பிள்ளை B. Sc., ஞானக்குமரன் இல்லம் 84/1, அரசடி வீதி யாழ்ப்பாணம். 5097

டிசம்பர் G. C. E. பரீட்சைக்கு கணக்கியல் பொருளியல், வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் பாடங்களும் 6-ம், 7-ம், 8-ம் வகுப்பிற்குரிய சகல பாடங்களும் காலை, மாலையிலும் கற்பிக்கப்படுகின்றது. R. T. மூர்த்தி, விக்னேஸ்வரா வீதி பரவுவீதி, யாழ்ப்பாணம். 5096

தேவை

இறைறைக்கு 40 வருட அனுபவமும் பிரமாண ஆசிரியர் திரு. சச்சிதானந்தா, ரூம் இருஷ்ண & Co சேவை Co போன்ற 7, 8, ஆசிரியர்களின் நற்சான்றிதழ் பெற்றவர் தற்பொழுது கணக்கு விஷயத்தில் மிகவும் நேர்த்தியடைந்த வருக்கு வேலை தேவை. இவர் எவ்விதக் கணக்குகளும் எழுதக் கடியவர். மற்றவை நேரில். ப. த. நடராசா, 18/1, மணல் தறைவேலி, சந்தர்மடம், யாழ்ப்பாணம். 5098

யாழ்ப்பாணக்குடா நாட்டில் புதிதாக ஆரம்பிக்கப்படும் ஓர் ஆங்கில வைத்திய நிலையத்திற்கு, இளைப்பாறிய ஆங்கில மருந்துவர் (Retired appothicary) தேவை 30-6-72க்கு முன். கீழ்க்காண் விலாசத்தில் நேரில் வந்து கொள்ளவும். டாக்டர் ப. சுப்பிரமணியம், கிருஷ்ணபவனம், மருதடி தறை வீதி, கல்வியங்காடு. 5100

கிறுவனை அரவம் தீண்டியது

எழுதுமட்டுவாள், வியாழன் படுத்திருந்த சிறுவன் பாம்பு தீண்டி மரணமானான். எழுதுமட்டுவாள் பகுதிக்கு ஆண்டைவிலுள்ள விழுப்பனை என்னுமிடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது. குறிப்பிட்ட இச்சம்பவம் நடைபெறமுன்பு இவரது சகோதரிக்குப் பாம்பு கடித்ததுடன் இவ்வீட்டிலிருந்த ஆடு, கோழி என்பவற்றையும் தீண்டியுள்ளது. குறிப்பிட்ட இச்சிறுவன் யாழ். வைத்தியசாலையில் மரணமானான்.

சங்காபிஷேகம்

கல்வியங்காடு, வியாழன் நாவலர்மார்க்கம் ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய நவராத்திர சங்காபிஷேக ஆனி உத்திர உற்சவம் இம்மாதம் 19 ம் திகதி நடைபெறும். இரவு தண்டிகை உற்சவமும் ஆலயார தீப உற்சவமும் நடைபெறும்.

கேள்வி விளம்பரம்

இதன்கீழ் குறிக்கப்பெறும் வேலைகளுக்கு பூநகரிக் கிராமசபையால் கேள்விகள் அழைக்கப் பெறுகின்றன.

1. சிந்தாமணிவேத இலவச வைத்திய சாலையின் அறைத்திருத்தம்.
2. சிவபுரங்கார முதலாம் அறைத்திருத்தம்.
3. பூநகரி கிராமசபையின் அலுவலகத்தில் கிணறொன்று கட்டுதல்.

1. கேள்விப்பிணைப் பணம் ரூபா. 20/-
2. பத்திரப்பணம் ரூபா 5/-
3. 19-6-72 மு. ப. 12 மணிவரை எமது அலுவலகத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
4. கேள்விப்பத்திரங்களில் எமது சபைதலைத்த முத்திரை பொறிக்கப் பெற்றிருத்தல் வேண்டும்.
5. 30-6-72 மு. ப. 10 மணிவரை கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.
6. [அ] தலைவர் இ. ச. பூநகரி.
[ஆ] பிராந்தியப் பொறியியலாளர் பூநகரி.
[இ] உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் எனும்முத்து முகவரிகளும் கேள்விப் பத்திரங்களை அனுப்பவேண்டும்.
[ஈ] கடித இடதுமூலையில் வேலையின் பெயரைக் குறிக்க வேண்டும்.
[உ] பதிவுத்தபாலில் கேள்விகளை அனுப்ப வேண்டும்.
[ஊ] இது சம்பந்தமான வேறு விபரங்களை அலுவலக வேலைநாட்களிலும், பூநகரிப் பொறியியலாளர் அலுவலகத்தும், யாழ்ப்பாணம் உ. உ. ஆணையாளர் பணிமனை வேலைநாட்களிலும் அறிதல் கூடும்.

ஸ. வல்லிபுரம்,
தலைவர்,
கிராமசபை,
பூநகரி.

கிராமசபை,
பூநகரி,
14-6-72. 4245

கொடியேற்றம்

சுழிபுரம், வியாழன் இன்று வழக்கம்போல் ஆலய வேலில் கொடியேற்ற உற்சவம் நான்கு நடைபெறும். தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறும்.

உற்சவம்

யாழ்ப்பாணம், வியாழன் திருநெல்வேலி தலங்கள் வீதி பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 17ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து நாட்கள் விநாயகர் நடைபெறும்.

வெளிவந்துவிட்டது
புதிய முறை உயர்தர தாவரவியல்
மயிற்சிகள் (பாகம் 2)
ஆசிரியர்: ம. சிவபாலராஜா B. Sc. (Special) Ceylon
(உயர்தர தாவரவியல் பாகம் I, II விரைவில் வெளியாக இருக்கிறது.)
விற்பனையாளரும், வெளியிடுவோரும்:-
ஸ்ரீலங்கா புத்தகசாலை
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
4244

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுடில்லிக்கருகில் சம்பவம்

கோர விமான விபத்தில் 78 பேர் பலியாகினர்!

புதுடில்லி, ஜூன் 15

புதுடில்லிக்கு அருகில் ஏற்பட்ட விமான விபத்தொன்றின் காரணமாக 84 பேர் பலியாகியுள்ளனர். 5 பேர் மாத்திரமே உயிர்தப்பினர். அவர்களிலும் இருவரின் நிலை மோசமாக விருக்கிறது.

ஜப்பானிய விமானக் கம்பனி யொன்றுக்குச் சொந்தமான இந்த டி சி 8 ரக விமானம் யமுனா நதியின் கரையில் பாவார்பூர் என்ற இடத்தில் விழுந்து நொறுங்கியது.

இந்த விமானத்தில் 78 பிரயாணிகளும் 11 விமானச்சிப்பந்திகளும் பிரயாணம் செய்தனர். டோக்கியோவிலிருந்து லண்டனுக்கு இந்த விமானம் போய்க் கொண்டிருந்தது. இதில் 24 பேர் புதுடில்லியில் இறங்கவிருந்தார்கள். இவர்களில் ஒருவர் மட்டுமே இந்தியாவைச் சேர்ந்தவர்.

கடந்த இரவு 8.30 மணிக்கு புதுடில்லியில் இந்த விமானம் இறங்கவிருந்தது. விபத்துக்குள்ளாவதற்கு 20 நிமிடங்களுக்கு முன்வரை விமானம் விமான நிலையத்துடன் தொடர்பு கொண்டிருந்தது. விமானம் கீழே விழுவதற்கு முன்னர் காற்றாகப் பறந்துகொண்டிருந்ததாகவும் விழு முன்னரே தீப்பற்றி எரிந்துகொண்டிருந்ததாகவும் பார்த்தவர்கள் கூறினார்கள்.

விமானம் விழுந்த இடத்துக்கு அருகாமல் தூரத்துக்கு சிறைந்த பாகங்கள் சிதறிக்கிடந்தன. சடலங்கள் சோரமாக சிதைந்து கிடந்தன. சில சடலங்கள் ஆடைகளில் கட்டப்பட்ட நிலையிலேயே ஆகாயமான காண முடியாதபடி எரிந்து கருப்பாய்க்கிடந்தன.

விபத்து ஏற்பட்ட இடத்தை இந்திய மத்திய அரசின் சுகாதார அமைச்சரும் சிவில் பேரிடர் நிதி அமைச்சரும் போய்ப்பார்த்தார்கள்.

இந்தவிபத்துக்கு காரணம் என்னவென்று அறியமுடியவும் விபத்து நடந்த சூழ்நிலைகளைக் கண்டறியவுமென ஜப்பானிய விமானக் கம்பெனி 70 பேர் கொண்ட ஆய்வுக்குழுவொன்றை இந்தியாவுக்கு அனுப்பவிருக்கிறது.

பாரத — சுவீடன் பிரதமர்கள் ஆலோசனை

ஸ்டொக்ஹோம் ஜூன் 15

இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி நேற்று ஸ்டொக்ஹோம்வந்து சேர்ந்த பின்னர் ஸ்வீடன் பிரதம மந்திரியுடன் 90 நிமிட நேரம் ஆலோசனை நடத்தினார்.

இந்தப் பேச்சுக்களின் பின்னர் இருநாடுகளுக்குமிடையில் உறவுகள் மேலும் பலப்படுவதாக ஓர் அதிகாரி கூறினார்.

பாகிஸ்தானுடனான போரில் இந்தியா இறங்க வேண்டியேற்பட்ட சூழ்நிலையை இந்தச் சந்திப்பின்போது ஸ்வீடிஷ் அதிகாரிகள் நன்கு விளங்கிக்கொண்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

திருமதி காந்தி இரு நாடுகளைக் கவிடிஷ் பிரதமரைச் சந்தித்துப் பேசினார். விலக்கும் ப்ரச்னை மேற்காகிய நிலைமை வளர்ச்சி குறைப்புப்போன்ற விஷயங்கள்பற்றி இருதலைவர்களும் பேசினார்கள்.

திருமதி காந்தி ஸ்டொக்ஹோமிலிருந்து புறப்பட்டு 17ம் திகதியன்று செக்கோஸ்லவாக்கியாவிற்குப் போக விருப்பதாகவொடி அந்த நாட்டுப் பத்திரிகைகள் ஏற்கனவே இந்தியாவைப்பற்றியும் இந்தியத் தலைவர்களைப் பற்றியும் செய்திகளையும் படங்களையும் கட்டுரைகளையும் பிரசுரிக்கத் தொடங்கியுள்ளன.

பொட்கர்னி ஹாங்ஸ்பயணம் கீஸிங்கர் பீகிங் செல்கிறார்

புதுடில்லி ஜூன் 16

சோவியத் அதிபர் திரு பொட்கோர்னி ஹாங்ஸ்க்குப் போகும் வழியில் புதுடில்லி விமானநிலையத்தில் வெளிஉறவு அமைச்சர் சர்தார் சுவரண் சிங்குடன் ஆலோசனைகள் நடத்தினார்.

அமெரிக்க அதிபர் திரு நிக்ஸன் மாஸ்கோவிற்கோ சீனத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களின் பின்னர் அந்த நாடுகளுக்குச் செல்வதில் ஏதோ அரசியல் முக்கியத்துவம் இருக்கவேண்டும் எனக் கருதப்படுகின்றது.

திரு பொட்கோர்னி அதிபர் நிக்சனுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் பற்றி இந்திய வெளிஉறவு அமைச்சரிடம் விரிவாக எடுத்துக்கூறியதாகவும் நம்பப்படுகின்றது.

சோவியத் அதிபர் கடவிடங்களும் சென்றுகொண்டிருக்கும் அதேவேளையில் அமெரிக்க அதிபர் நிக்சனின் அரசியல் ஆலோசகர் டாக்டர் கிஸிங்கர் அடுத்தவாரம் திங்கட்கிழமை பீகிங் செல்வார் என்று தெரிகின்றது.

'உரிமைகள் வழங்க சு. கட்சி தவறிவிட்டது'

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மாநகரசபையின் தன் ஏற்கனவே தீர்மானம் மூலம் கோரியபடி, ஸ்ரீலங்கா உள்ளிட்ட உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஒடுப்பட்ட ஜனநாயக மனித உரிமைகளைப் புதிய அரசமைப்புத் திட்டத்தில் உறுப்புரைகளாக சேர்க்கும்பொருட்டு, புதிய அரசமைப்புத் திட்டத்துக்கு திருத்தம் கொண்டுவர வேண்டும்.

யாழ்ப்பாண மாநகரசபை என்ற மாநகரத்தக் கட்டத்தில் மேற்கண்ட பிரேரணையைக் கொண்டுவர யாழ். மாநகரசபை உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினருமான திரு. க. வீ. நெல்சேந்திரன் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

அப்பிரேரணையில் மேலும் குறிக்கப்பட்டுள்ளதாவது:

"சமத்திற் வாழும் சகல மக்களும் ஒன்றுபட்டு ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் சகோதரர்களாகவும் சமத்துவமாகவும் வாழ்வதன்மூலமே நாட்டின்பொருளாதார அபிவிருத்தியை மக்களுக்குத் தீர்வுகாண முடியுமென்ற நல்லெண்ணத்தால் உந்தப்பட்டே வடமகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கிளைகள் ஆங்காங்கே ஆரம்பிக்கப்பட்டன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதான கட்சியாகக்கொண்டு ஆட்சி மன்றத்தில் முன்றில் இரண்டு பங்குக்கு மேற்பட்ட பெரும்பான்மைப் பலத்துடன் பதவியில் அமர்ந்துள்ள கூட்டரசாங்கம் மனம் வைத்தால் நாட்டின் தேசிய சிறுபான்மையினரின் மனக்குறைகளுக்கு நிரந்தர நிவாரணங்களை அரசியல் திட்டத்தில் உறுதி செய்வதில் ஏதும் சிரமம் இருக்க முடியாது. அப்படியிருந்தும் அப்பேற்பட்ட ஒடுப்பட்ட உறுதியுரைகளை சிறுபான்மைத் தேசிய இனமான தமிழ் இனத்துக்கு அரசியல் திட்டத்தில்தானே வாக்குப்பண்ணுவதற்கு கூட்டரசாங்கத்தில் பிரதான கட்சியான சுதந்திரக் கட்சி தவறியிருப்பது, நாடு கடைப்பிடிக்கும் பொருத்தமற்றதிற்கும் சமுதாயச் சமூக நல்லுறவுக்கும் ஏன் இப்பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால வளர்ச்சிக்கும் உகந்ததல்ல.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கிளை மாநாடுகளிலிருந்து உருவாகியவரைவு பெரும்பான்மை இனத்தவரான சிங்கள ஆளும் பாராளுமன்ற அரசியல் கட்சியே கேட்டுக்கொள்ளுகின்றது.

என்று நாடுகிக் பரவலாகவுள்ள கருத்துமாறி, தேசிய சிறுபான்மை மக்களும் சொந்தம் பாராட்டக்கூடிய ஒரு தேசிய அரசியல் கட்சியாகத் தான் தமிழ் அரசியல் திட்டத்தில் உறுதியாகவுள்ள தமிழ் பேசும் மக்களது நம்பிக்கையைப் பெறும் பொருட்டாக யாழ். மாநகரசபை மன்றம் ஏற்கனவே தீர்மானமுலம் கோரியுள்ளபடி, புதிய அரசமைப்புத் திட்டத்துக்குத் திருத்தம் கொண்டுவருமாறு இம்மன்றம் கௌரவ பிரதம அமைச்சரும், கூட்டரசாங்கத்தின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியுமான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா அவர்களை வேண்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணிசைப் பயிற்சி பூர்த்திவிழா

இலவசமாகண் விவசாய இந்நாட்டின் தேவார திருவாசகங்களைப் படிக்கக் கூடியவர்கள் ஆயிரம்பேர் இருந்தாலும் இவர்கள் பண்ணோடு பாடக் கூடிய அற்றவர்களாகவே இருந்தனர்.

இக்குறையை ஓரளவு நிவர்த்திக்க பண்ணிசைப் புலவர் திரு. பி. ஏ. எஸ் இராஜசேகரனார் முன்வந்ததை வரவேற்பதாகக் கூறினார்.

இவ்வாறு யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. வி. முருகேசம்பிள்ளை நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற பண்ணிசைப் பயிற்சி வகுப்புப் பூர்த்தி விழாவில் பேசும் தலைமைவகித்துப் பேசும் போது கூறினார்.

பண்ணிசைப்பூர்த்தி விழாவைப் பயிற்சிவகுப்புக்களை நடத்திய பண்ணிசைப் புலவர் ஓதுவார் மூர்த்தி திரு. பி. ஏ. எஸ். இராஜசேகரன் மிகவும் சிறப்பாக நடத்தினார் இவ்விழாவில் பலர் பாராட்டுரை வழங்கினார்கள்.

இலவச ஆயுர்வேத வைத்தியசாலையில்

இந்த நோய்களுக்கு விசேஷ சிகிச்சை?

குருநகர், வியாழன்

யாழ். மாநகர இலவச ஆயுர்வேத வைத்தியசாலையில் வாதம் குஷ்டம் சிறுபிள்ளைகளுக்கான தொற்று நோய்கள் [illegible] வாதம் ஆகிய வியாதிகளுக்கு விசேட சிகிச்சைகள் செய்வதற்கும் ஏனைய சகல விதமான நோய்களுக்கும் சிகிச்சையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக மேற்படி வைத்தியசாலையின் பிரதம வைத்தியராக நியமிக்கப்பட்டுள்ள பிரதம வைத்தியகலாநிதி ஏ. ஏ. கந்தையா தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பகுதியில் முதிய மருத்துவர் பெற்கடிய வசதிகள் இருந்துவருவதால் சிறந்த ஆயுர்வேத வைத்தியத்தை நல்லமுறையில் செய்யக்கூடிய வாய்ப்பு இப்பகுதியில் இருப்பதாகவும் இதனால் மக்கள் மாற்றமுடியாமல் கஷ்டமுறும் பல வியாதிகளுக்கு தீர்க்க தரிசன நடவடிக்கை எடுத்துவருவதாகவும் இந்திய அரசாங்கத்தின்படி இவ்வைத்தியசாலையில் பல பிரிவுகளை உருவாக்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

கொடிகாமம்

உப-தபால் நிலையம் தரம் உயர்த்தப்படும்

யாழ்ப்பாணம், வெள்ளி

கொடிகாமம் உப தபால் நிலையத்தைத் தரம்உயர்த்தி பெரிய கந்தோராக்குவதற்குத் தபால் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. கந்தோருக்கான இடத்தைத் தேடுவதில் தற்பொழுது தபால் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளார்.

ஒரு தொகுதியில் இரு பெரிய தபால் கந்தோர் இருக்க வேண்டுமென்ற தபால் அமைச்சரின் திட்டத்தின் கீழ் இந்த உப தபால் நிலையம் தரம் உயர்த்தப்படவிருக்கிறது. இதுவரை சாவகச்சேரி தொகுதியில் ஒரே ஒரு பெரிய தபால் கந்தோராக சாவகச்சேரி தபால் நிலையம் மட்டுமே இருந்துவந்தது.

கொடிகாமம் சந்தைக்கு அருகில் கடந்த 10 வருடகாலமாக எதற்கும் பாவிக்கப்படாமல் கச்சாய் கிராம சபைக்குச் சொந்தமான 5 பரப்புக் காணியிருப்பதாகவும் அதற்குள் தபால் கந்தோரை கட்டுவதற்கான முயற்சியை எடுக்கும்படியும் அதுவரைக்கு மேலுள்ள உப தபால் நிலைய கட்டடத்தையே தபால் கந்தோருக்கும் பாவிக்கலாம் என்றும் கொடிகாமம் அபிவிருத்திச் சபையினர் தபால் அமைச்சரிடம் மகஜர் மூலம் கோரியுள்ளனர்

கொடிகாமம் உப தபால் நிலையத்தை விரைவில் பெரிய கந்தோராக்கும்படி கச்சாய் கிராம சபையினர் கோரியுள்ளனர்

.....

றிமான்டில் வைக்க உத்தரவு

குருநகர், வியாழன்

யாழ். நகரிலுள்ள கனிஷ்ட மேட்டர் மனேஜர் ஒருவர் பலமுறத்தியதாக எடுப்பேர்மீது யாழ் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் ஒருவர் விடுதலை செய்யப்பட்டார். ஆறுபேர் குற்றவாளிகளாக காணப்பட்டதைத் தொடர்ந்து தீர்ப்புவழங்குவதை இம்மாதம் 28ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அதுவரை ஆறுபேரையும் றிமான்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இவ்வழக்கு யாழ் நீதி மன்றத்தில் நீதிபதி திரு. சோலிஸ் மெண்டிஸ் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

தமிழ்த்தின விழா

உடுப்பிட்டிவட்டாரப் போட்டி முடிவுகள்

கரவெட்டி, விநாயகர் உடுப்பிட்டி வட்டாரப் பாடசாலைகளின் தமிழ்த்தின விழாப்போட்டி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. 39 பாடசாலைகள் பங்குபற்றிய இப்போட்டியின் முடிவு விபரங்கள் வருமாறு:

பிரிவு (1) - பாலதன்: இ. கெநாதன் ஞானசாரியார், கு. இரவிந்திரன் உடுப்பிட்டி அ. மி., சி. புஷ்பராணி இமையாணன் அ. த. பாடசாலை.

பேச்சு: க. வைஜந்திமாலா மாவிட்டபுரம் கிந்தி, ம. நாகபூஷணம் அல்வாய் சின்னத்தம்பி, ந. விக்கினேஸ்வரி, இமை. அ. த. க.

வாசிப்பு: க. சாந்தினி சோகிள உடுப்பிட்டி மகளிர், சி. கருணாகரன் ஞானசாரியார், சே. சரோஜா நெல்லியடி மெ. மி.

பிரிவு (2)- பாலதன்: சோ. மகிழவர்ணராசி ஞானசாரியார், சி. வனிதா விக்னேஸ்வராக்கல்லூரி. க. மைதிலி வட இந்து மகளிர்.

பேச்சு: நா. மாலதி வேதாரணியேஸ் வராவித்தி, ந. தயாநிதி நெல்லியடி ம. ம. வி., ஆ. வாணிமதி உடுப்பிட்டி மகளிர்.

பிரதிபண்ணல்: க. யாழினந்தினி திரு இருதயக் கல்லூரி, சி. சந்திராவதி ஞானசாரியார், ந. முருகதாஸ் மானிப்பாய் வாசகர்.

சொல்வதெழுதல்: சோ. ராஜன் திருஇருதயக் கல்லூரி, சி. சிவசோதினார் விக்னேஸ் வராக் கல்லூரி, க. பத்மராதா வட இந்து மகளிர்.

பிரிவு 3- பாலதன்: ந. ஜெயராசா ஞானசாரியார், வே. கங்காணி நெல்லியடி ம. ம. வி., வை. விமலாதேவி வட இந்து மகளிர்.

பேச்சு: ச. கமலராசா உடுப்பிட்டி அ. மி. க. ஆமிர் தருமராஜா திருஇருதயக் கல்லூரி, ந. தமயந்தி வட இந்து.

சொற்பொழிவு: ந. தமயந்தி வட இந்து. செல்வச்சந்திரன் உடுப்பிட்டி அ. மி. ந. சின்னையா விக்கினேஸ்வரா.

கட்டுரை: க. பத்மாவதி புற்றளை ம. வி., சி. பத்மராசா தேவரையாளி, நா. நளினி ஞானசாரியார்.

பிரதிபண்ணல்: ந. சிவகுமாரன் புற்றளை ம. வி., சி. சிவமணி வட இந்து. வே. சரஸ்வதி விக்னேஸ்வரா.

சொல்வதெழுதல்: 3- சோ. மனோரஞ்சிதம் விக்னேஸ்வரா, நா. வாசுகியம்மாள் உடுப்பிட்டி மகளிர், சி. சிவமணி வட இந்து.

விநாதம்: ந. லலிதா வட இந்து மகளிர், சு. தமயந்தி விக்னேஸ்வரா, சா. கமலநாயகி உடுப்பிட்டி மகளிர்.

நாடகம்: இமையாணன், மத்திய நெல்லியடி ம. வி., உயிராமானமா மணியகாரன்தோப்பு.

இன்றைய பலன்

ஆனி மாதம் 3-ந் திகதி
16-6-72

மேஷம்: இதயப்படுதாவிக் இன்பத்தில் உத்து. வெளியிடத்திலிருந்து வரவேற்கத்தக்க செய்தி கிடைக்கும்.

ரிஷபம்: புதிய உடைகள் வந்கைகொள்ளுதிறது இடமுண்டு. வியாபாரத்துறையில் வெற்றியும் கிடைக்கும்.

மிதுனம்: பழய நினைவுகள் உங்களை வலையில் ஆழ்த்தும் நம்பிக்கை மூலம் பொருள் விரயத்திற்கு இடமுண்டு.

கடகம்: ஆசை ஆண்களால் அவப்பெயருக்கு இடமுண்டு குறுக்கு வழியில் இறங்க வேண்டாம்.

சிம்மம்: வாக்குவன்மையின் மூலம் பெரிய மனிதர்கள் ஆதரவுகிட்டும். இளைஞர்களுக்கும் இடமுண்டு.

கன்னி: முன்னேற்றமான காரியங்களில் எதிர்பாராத தடைகள் ஏற்படும். சமோதர வழியாக சஞ்சலத்திற்கு இடமுண்டு.

துலாம்: குடும்பத்தில் திருப்திகரமான சூழ்நிலை தென்படும். கல்வித்துறையில் ஆதிக்க ஆர்வம் பிறக்கும்.

விருச்சிகம்: அறவழியில் மனம் நாடும் பொதுவிய காரங்களிலும் பொருள் செலவுமுண்டு.

தனுசு: புதிய எண்ணங்கள் தலைதூக்கும்: கற்றுடலில் மதிப்பு உயர்வதற்கு இடமுண்டு.

மகரம்: நீண்டநாள் முடுமத்திரமாக இருந்த ஒரு உண்மை இன்று வெளிவரலாம். நிலைமையைச் சமாளிப்பதில் வெற்றி உண்டு.

கும்பம்: உங்கள் மனதிலுள்ள மற்றவர்கள் ஆயுதமாகப் பயன்படுத்தமுனைவர் துணிவேதுமே.

மீனம்: சகபோகிதருத்தி நன்மையைத்தரலாம் இன்று நீர் வலையிலாத மனிதன்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

வீடுப் பாவனைக்குரிய
தண்ணீர் இறைக்கும்
மின்சார மோட்டர்கள்
3/4 அங்குலத்திலிருந்து 2 அங்குலம் வரையும்
பல வகையில் விற்பனைக்கு இருக்கிறது.
ஒரு வருட உத்தரவாதம் அளிக்கப்படும்.
இதற்கான
சகலவிதமான எஸ்-லோன்
பைப்புகளும்
மாபின் பொருட்களும்
[SANITARY WARE]
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்
நியூரோன்
எலெக்ட்ரிக்கல்ஸ்
ஸ்ரான்லி ரோட் — யாழ்ப்பாணம்.
போன்: 7016

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

16 — 6—72 வெள்ளி

(செய்திகள், காலை 6-30 மணி 12-45, மாலை 6-00 இரவு 9-00)

காலை- 6-15 நாதஸ்வரம். 6-30 காலை நற்சிந்தனை இரா. சிவசுப்பிரமணியம். 6-25 இன்னிசை நற்சிந்தனை, 6-40 அறிவிப்புகள். 6-50 துதிப்பாடல். 7-00 பண் ஒலி இன் தமிழ்: சோ. சோதிநாதராஜா 7-30 காலைச் செய்திகள் 7-35 குரல்யாழ், 8-00 பாரதியார் குர்-ஆன் 8-15 இன்னிசைகீதம்

6-10 அறிவிப்புகள் 6-15 கலைமாலை: சுகாநாரத் திணைக்களத்தினர் ஆனிக்குரிய நிகழ்ச்சி, 6-30 பஜனை: ஸ்ரீமுத்துலிங்கநாயகர் ஆலயத்திலிருந்து பூசையும் இராஜராஜேஸ்வரியின் பஜனையும் ஆஞ்சநேய 7-00 இன்னிசை மன்றம் நடத்துவோர்: வாரொலி ஆண்ணா 7-30 உலகச் செய்திகள் 7-35 முத்திநெறி: ஆனி உத்தரம் பிரதிஷாக்கம்: சோ. சண்முகசுந்தரம் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-10 செய்திகள் பின்னணியில் 9-15 அறிவிப்புகள் 9-30 பேச்சு: "உணவுகள்" வாரொலி வைத்தியர். 9-40 வாசிப்பு- ஏ. கே. கடுணாகரன்

.....

தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி

யாழ்ப்பாணம் வெள்ளி தேசிய பேரவையை பலிஷ்கரிக்கும்படியும் சத்தியப்பிரமாணம் செய்யவேண்டாமென்றும் வவுனியா தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணியினர் தமிழர் கூட்டணி முன்னணியினரிடம் கோரியுள்ளனர். இதுபோன்று கிளிநொச்சி, கரவெட்டி, சாவகச்சேரி தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணியினரும் கூட்டணியினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வாரநூற்றாண்டுக்குமேலாக தமிழ் எம். பிக்கள் ஆட்சிமன்றத்திற்குள்ளிருந்து எந்தவித உரிமைகளையும் பெற்றுவிடவில்லையென்றும் தொடர்ந்தும் ஆட்சிமன்றத்திற்குச் செல்வதால் பயனில்லையென்றும் வாலிப முன்னணி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ் எம் பிக்கள் மட்டுமன்றி தமிழ்ப்பகுதிகளிலுள்ள உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் மக்கள் கமிட்டி உறுப்பினர்களும் சமாதான நீதிவான்களும் பட்டதாரிகளையும் பதவிகளையும் உதறித்தள்ளுவதன் மூலமே ஏகோபித்த எதிர்ப்பைத் தெரிவிக்கலாம் என்றும் அவர் கூறினார்.

.....

சிங்கள போதனை

கல்வெட்டித்துறை விநாயகர் சமீபத்தில் கல்வி இலாகாவின் கற்றறிக்கையில் பிரகாரம் பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்கும் வகையில் வாக்கெடுப்பு மூலம் பெற்றோர் ஆசிரியர் சங்கம் தங்கள் நிர்ப்பந்தம் அறிவிக்கும்படி கேட்டிருத்தலை தொடர்ந்து புலோலி ஆண்கள் மகாவித்தியாலயத்தில் நடந்த பெற்றோர் ஆசிரியர் சங்க கூட்டத்தில் 40 பேர் எதிர்த்தும் 10 பேர் ஆதரித்தும் வாக்களித்தனர்.

இவ்வாறே பருத்தித்துறை தொடர்ந்த பெண்கள் உயர் கல்லூரியிலும் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது [illegible] எதிர்த்தும் [illegible] வாக்களித்தனர்.

லஞ்சத்தடுப்புப் பகுதிக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், செல்வி சொழுப்பிள் இலங்கையும் லஞ்சக் குற்றத்தடுப்புப் பகுதிக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய திடீர் பரிசோதனைக் குழுவில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய திரு சிவசம்பு தலைமைக் இடமாற்றம் பெற்றுள்ளார். இவருடைய இடத்துக்கு திருறாபல் நியமனம் பெற்றுள்ளார்.

திரு இவன் விக்கிரமசிங்கா லஞ்சத்தடுப்புப் பகுதியில் ஆய்வாளராக கடமையேற்றபின்னர் லஞ்சப் பகுதி விசாரிக்கப்படுவதாகவும் இப்பகுதியில் கடமையாற்றப் பலரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

கடந்தகாலத்தில் கடமையாற்றும் ஒரு உதவிப்பொலிஸ் கப்பிரிண்டனும் விரைவில் இப்பகுதிக்கு இடமாற்றம் பெறலாமென அறியப்படுகின்றது. (இ.நி)

.....

மகோற்சவம்

கரவெட்டி, விநா.

கரவெட்டி மேற்கு மத்தொளி நுக்கோடை முருகமூர்த்தி கோவில் வருடாந்த மகோற்சவம் சென்ற சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. பத்து நாட்களும் திருவிழா நடைபெற்று எதிர் வரும் திங்கட்கிழமை ஆனி உத்தரத்தன்று தீர்த்த உற்சவம் நடைபெறவுள்ளது.

சங்கத்தேர்தல்

குடுநகர், விநாயகர் ஒத்திவைக்கப் பட்டிருந்த வேலணை நோ. க. சங்கத்தின் 11ம் இலக்க கிளையின் தேர்தல் அடுத்தமாதம் 15ம் திகதி நடத்தப்பட விடுக்கிறது. இதற்கான உத்தரவை கூட்டுறவு உதவி ஆணையாளர் இச் சங்கத்தின் தேர்தல் அதிகாரிக்கு அறிவித்துள்ளார்.

.....

வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி அகில இலங்கை அரசாங்க வாக்கெடுப்பாளர் பாடசாலை ஆசிரியர்களாக வடமாகாண ஊழியர்சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 18ந் திகதி காலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற விடுக்கிறது.

.....

நியமனம்

கல்லூரி விநாயகர் வாக்கெடுப்புத்துறைப் பட்டினசபையில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய திரு எஸ். சிவசண்முகநாதன் மட்கல்லடி எழுதுவினைஞர் பரீட்சையில் சித்திபெற்று கல்முனை மட்கல் எழுதுவினைஞராக நியமனம் பெற்றுள்ளார்.

நினைவு

சைவ நெறியாளர்

மறைந்த உயர் திரு. ம. சுந்தரலிங்கம் அவர்கள் நீர்வேலி கிராமத்தில் 87 ஆண்டுகள் சைவ வாழ்வும் செந்தமிழ்ப்பணியும் மிகுந்த பெரியாராவர். இவர் தம் வாழ்வுக் பொதுஜன சேவையில் விக்க ஈடுபாடு கொண்டவர். சாதிக் பேதமோக்குக் கூட்டுறவுச் சங்க நிருவாகத்திலும் நீர்வேலி தெற்கு கிராம் புலையில் உற்பத்திச் சங்கத்தில் நிருவாக உறுப்பினராகவும் விக்கிவேலர ஜக்கிய சங்க ஆரம்ப அங்கத்தவராகவும் செல்வேல் ஜக்கிய வண்டி சாலை நிருவாகத்தில் ஒருவராயும் பல வாண்டுகள் கடமை புரிந்தார்.

—அன்பன்

பெற்றோர் ஆசிரியர் சம்மேளனம்

கல்வெட்டித்துறை. பிரா. உடுப்பிட்டி வடக்கு பெற்றோர் ஆசிரியர் சங்க சம்மேளனம் உடுப்பிட்டி வடக்கு கல்வி அதிகாரி திரு கு. இராசையா தலைமையில் நெல்லியடி மத்திமகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தராக தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: ஆ. க. மாணிக்கம். செயலாளர்: சி. வல்லிபுரம். பொருளாளர்: த. சந்தானம்.

கார் விபத்து

கரவெட்டி, விநாயகர் பருத்தித்துறை வாத்திச் சிலையடிக்கு முன்னால் இரு கார்கள் விபத்துக்குள்ளாயின. இருகாரிலும் சிறு சேதம் ஏற்பட்டது. பிரயாணிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

அகையாள அட்டைப் படம்

முக்கூற்றீவு, விநாயகர் முக்கூற்றீவு. புதுக்குடியிருப்பு, தண்ணீருற்று -முள்ளியவளை கிராமசேவையாளர்கள் பகுதிகளில் குடையாள அடையாளங்களாக படமெடுக்கப்பட்டுவிட்டன. அடுத்த வடப்பிடிப்பு அடுத்த மாதம் நடைபெறும்.

இலங்கை
ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்
இறக்குமதி செய்தவை
இரசம் நெல்லிக் கெந்தகம்
குங்குமப்பூ சாதிலிங்கம்
கோரோசனை விளைவுசூடம்
முதலிய மருந்துச் சரக்குகளும்
நாவின்னா அவுடதசாலை மருந்துகளும்
கூட்டுத்தாபன விலைகளுக்கு பதிவுபெற்ற
வைத்திய்ர்களுக்கும் மருந்துச்சரக்கு
வியாபாரிகளுக்கும் யாழ்ப்பாணத்தில்
கிடைக்கும்:-
சுந்தரம் பிறதர்ஸ்
73, மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்துவில் கொலை வழக்கு

'மகன் நவரத்தினம் இறந்து கிடந்தார்'

யாழ்ப்பாணம் வெள்ளி சம்பவம் நடந்ததினம் நான் வீட்டிலிருந்தேன். அப்போது வாரரவத்த விஷயத்தைப்பற்றி அறிந்தனர் அந்த நபரைக் கிட்டத்தபின் அதை யோசனை. மகன் நவரத்தினம் இறந்து கிடந்தார்

மந்துவில்கொலை வழக்கில் சாக்கியமளித்த இறந்தவரின் தந்தை சின்னையா மேற்கண்டவாறு கறினார்

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதிபதி ஜெயரத்தினா முன்னிலையில் நேற்று இரண்டாவது தினமாக விசாரணை செய்ய பட்டது

இவ்வழக்கில் வந்தவிலிக் 11-ம் ஆண்டு ஜனவரி 22-ம் தேதி இளையன் சின்னத்தம்பி வைரவன் தங்கராசா பொன்னன் நடராசா வேலன் குஞ்சன் வேலன் மாணன் ஆகியோர் சட்டவிரோதமாகக்கூடியதாகவும் சின்னையா நவரத்தினத்தை கொலைசெய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது

எதிரிகள் சார்பில் அதிவணக்கத்துக்குரிய வி. எக் சண்முகநாதன் புறக்டர் எக் பாலசிங்கத்தின் துணையுடன் ஆஜராகினார். எதிரிகளுக்காக ஆஜராகிய புறக்டர் கே.சி. நாகேஸ்வரன் நியமிக்கப் பட்டிருந்தார் அரசாங்கதரப்பில் அதிவணக்கத்துக்குரிய குமார் ஆஜர் சேரா ஆஜராகினார்.

எதிரிகள் பக்க சாக்கியராக சின்னையா சாக்கியமளித்தவரின் தந்தை கறியதாவது: இறந்தவர் எனது மகன். சாக்கியமளித்த மல்லிகாதேவி எனது மகள் சம்பவம் நடந்த இடத்தில் மல்லிகாதேவியைக் கண்டேன். அழுது கொண்டிருந்தாள். நான் அதற்கிங்கே, அதன்பின் பொலிஸுக்கு சென்று முறைப்பாடு செய்தேன். என் மகனுடன் நான் விசாரிக்கவுமில்லை. மழையழிதான் இக் கொலைக்கு காரணமென்று பொலிசுக்கு சொல்லவில்லை. பொலிசில் முறைப்பாடு செய்தபின் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தேன்.

அரசாங்க வழக்கறிஞர் திரு குமார் ஆஜராகினார் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: உமக்கு சொந்த மனைவியுடன் ஆண்குழந்தையும் உண்டு? 2 மனைவிமார் உண்டு.

வழ: நீர் ஒரு முஸ்லீமல்ல? நான் ஒரு தமிழன்

வழ: தமிழர் ஒருவர் ஒரு பெண்ணைத்தான் மணக்கலாம்? எனக்கு இரண்டு உண்டு.

வழ: சொந்தமனைவியின் பிள்ளைகள் நான்தவரத்தினமும், மல்லிகாதேவியும்? ஆம்

வழ: மற்ற மனைவியின் பெயர் பொன்னு

வழ: பொன்னு 2ம் எதிரிக்குச்சொந்தமா? சிறியதாய்

வழ: பொன்னுவுக்குப் பிள்ளைகளுண்டா? ஆம்

வழ: அவரை மனைவிமாரிடம் வைனிப்பீர்? ஆம்

வழ: பொன்னுவையும் பிள்ளைகளையும் பராமரிப்பது நீர்தான்? ஆம்

வழ: 2ம் எதிரி வீட்டிற்கு வாறவரா? இல்லை

வழ: நவரத்தினம் மறியலால் எப்போ வந்தவர்? 7 மாதத்திற்கு முன்னால்

வழ: நீர் சிறைக்குச் சென்றீரா? ஆம்

வழ: இரவிடைக் கொலை வழக்கில் எதிரியாக இருந்தீர்? ஆம்

வழ: 2 மாதம் மறியல் இருந்தீர்? ஆம்

நீதிபதி: நவரத்தினம் மல்லிகாதேவி ஒரு வீட்டிலிருந்தார்களா? ஆம்

ஜூரி: விஷயம்பற்றி வார்த்தைகள் நடந்தது?-பார்த்தா.

ஜூரி: ஆணு பெண்ணு?- தெரியாது.

ஜூரி: சம்பவம் நடந்த இடத்தில் மகள் கிடந்தார்?- ம்.

ஜூரி: மகனை ஏன் விசாரிக்கவில்லை?- மகன் இறந்து கிடந்ததால் கேட்கவில்லை

குறுக்கு விசாரணையில் சாக்கியர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு நாதன் கறியதாவது: சின்னையாவின் வாக்குமூலத்தை சார்ஜன் அருளானந்தம் பதிவுசெய்தார் சின்னையா இறந்த நவரத்தினத்தின் தகப்பனார். சம்பவம்நடந்த இடத்திற்கு செல்லும்முன் வாக்குமூலத்தை பார்வையிட்டேன். அதை சார்ஜனுடனும் 4 கான்ஸ்டபிள்களுடனும் சென்றேன். வைரவரசாவின் வாக்குமூலத்தை அவரது வீட்டில் இரவு 9.15 மணிக்கு பதிவு செய்தேன்.

சார்ஜன் அருளானந்தம் சாக்கியமளிக்கையில், வந்த சின்னையாவின் வாக்குமூலத்தை பதிவுசெய்ததாக கறினார். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

அடையாள அட்டை யாருடையது?

இ. சின்னத்தரை என்பவரால் யாழ்ப்பாணம் புதுச்சந்தைக்கருகில் இலக்கம் அரசாங்க விதையகம் அருகாமையில் இனப்பாற்றிச் சம்பவத்திட்ட அங்கத்தவர் அடையாள அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டு "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. (சாதாரணம்) 1972

பாடங்கள்:

1. தூய கணிதம்	8. கணக்குப் பதிகியல்
2. உயர்தர "	9. வர்த்தகம்
3. பிரயோக "	10. தமிழ்செழுத்து
4. எண் "	11. சமயம்
5. பௌதிகம்	12. தமிழ்
6. இரசாயனம்	13. ஆங்கிலம்
7. உயிரியல்	14. சிங்களம்

நேரம்: காலை 8-30 தொடக்கம் பி.ப. 3-30 வரை

ஆசிரியர்கள்: அனுபவமுள்ள பட்டதாரிகள்

விடுதி: மாணவர்கள் தங்குவதற்கு விடுதி வசதிகள் ஒழுங்கு செய்து [illegible] கிடைக்கப்படும்.

இடம்:

கிறவுண் போதனா நிலையம்

இல. 16, [illegible] வீதி. சுன்னாகம் [illegible] யாழ்ப்பாணம்.

விபரங்களுக்கு நேரில் வரவும்.

நிர்வாகி

கிறவுண் போதனா நிலையம்

பஸ்சேவை அதிகரிப்பு

ஒருநாள். விசாழன் நயினாதீவு நாகபூஷணியம்மன்கோயில் உற்சவத்தை முன்னிட்டு சென்ற 12ம் திகதி தொடக்கம் குறிகாட்டுவான் இறுப்பிட்டி ஆகிய இடு துறைமுகங்களுக்கும் பஸ்சேவை அதிகரிக்கப்பட்டுள்ளது.

காலையும் மாலையும் வழமையைவிட இரண்டுசேவைகள் மேற்படி இடங்களுக்கு அதிகரித்துள்ளதாகவும் முக்கியமான திருவிழா நாட்களில் தேவைக்கேற்பமேலும் பஸ்கள் அதிகரிக்கப்படவிருப்பதாகவும் இ. போ. ச. உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

ஜீ. சி. ஈ. பரீட்சை கட்டணம் அதிகரிப்பு

கோலிடை. விசாழன் இதுவரை 25 ரூபா கட்டணமாக அறவிடப்பட்டு வந்த ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சைக் கட்டணம் 35 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. 60 ரூபாவாக இருந்துவந்த உயர்தர பரீட்சைக் கட்டணம் 80 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஆறுபாடத்திற்கு மேற்தோற்றுவதாயின் 85 ரூபாவே செலுத்தவேண்டும். ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சையில் அதிகரிக்கப்பட்ட கட்டணத்தின்படி ஒருபாடத்திற்கு 10 ரூபா இரண்டுபாடங்கள் 15 ரூபா மூன்றுபாடங்கள் 20 ரூபா நான்குபாடங்கள் 25 ரூபா ஐந்து பாடங்கள் 30 ரூபா ஆறுபாடங்களிலிருந்து எட்டுப்பாடங்கள்வரை 35 ரூபா. பாடசாலையிலிருந்து முதன்முறை தோற்றும் மாணவர்களிடமிருந்து கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. பாடசாலைகளிலிருந்து இரண்டாம் தடவை தோற்றும் மாணவர்களிடமிருந்து தனிப்பட்ட பரீட்சார்த்திகளைப்போலவே 35 ரூபா அறவிடப்படும்.

முன்பு 60 ரூபாவாக இருந்த ஜி. சி. ஈ. உயர்தர பத்திரப் பரீட்சைக் கட்டணம் 80 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இப்பரீட்சைக்கு முன்பு ஒருபாடத்திற்கு 15 ரூபாவாகவிருந்த தற்போது 20 ரூபாவாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

விண்ணப்பம் ஜூலைமுன் அனுப்புக

ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சைக்கு இவ்வருடம் டிசம்பர் மாதம் தோற்ற இருக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பாடசாலைப் பரீட்சார்த்திகள் ஆகியோர்விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய கடைசித்தினம் ஜூலை மாதம் 1-ம் திகதியாகும் பாடசாலைகளுக்கு பரீட்சை இலாகா விண்ணப்பப் பத்திரங்களை இம்மாதம் 20-ம் திகதிக்குமுன் அனுப்பி வைக்கும்

இம்மாதம் 16-ந் திகதி முதல் 23-ம் திகதி வரையும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தங்கள் பெயர், முகவரி எழுதப்பட்ட பெரிய காகிதமொன்றை ஒன்றை பரீட்சைப்பகுதிக்கு அனுப்பி வைத்து விண்ணப்பப்பத்திரங்களைப் பெறமுடியும். காகித உறையின் இடது பக்கமூலையில் "எக்-3" என குறிப்பிடவேண்டும் இம்மாதம் 23-ந் திகதியிலிருந்து 30-ந் திகதிவரை விண்ணப்பப்பத்திரங்களை பரீட்சை இலாகாவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தாரளைத் தெரிவத்தது என்றும் கறினார்.

ஈடற்பட்ட பத்திரப்படின் பிரதம சாரதியான ஜெயரத்னவும் மற்றும் கடற்படையைச் சேர்ந்த கழிவோடியான ஏ. ஏ. தங்காவும் சாட்சியமளித்தனர்

யாழ்ப்பாண வைத்திய அதிகாரி டாக்டர் பாலசிங்கம் பிரேத பரிசோதனை நடத்தினார்.

சிங்களம் கற்பிக்க வேண்டுமா?

எண்பதுபேர் எதிர்ப்பு; நான்கு பேர் ஆதரவு

பருத்தித்துறை. விசாழன் சிங்களம் இரண்டாம் மொழியாகத் தமிழ் மாணவருக்குப் போதிக்கப்படுவதாயின் ஆங்கிலத்துக்கு இடமிருக்காது ஆனால் இன்று வல்வெட்டித்துறைக்கோ சுன்னாகத்துக்கோ சட்டக்கல்லூரிக்கோ மாணவர்கள் செல்லவேண்டுமாயின் ஆங்கில அறிவு அவசியம் கற்றால் திருப்திகரமான நிலையை அடையாத மாணவர், ஆங்கிலம் படிக்காது விட்டால் நிலைமை மேலும் மோசமடையும்.

இவ்வாறு பருத்தித்துறை ஆங்கிலமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்னம் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரிப் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் கறினார்.

சிங்களம் கற்பிக்க வேண்டுமென எண்பது வீதம் சிங்களம் கற்பிக்கவேண்டுமென நான்கு பேர் வாக்களித்தனர்.

அதிபர் செல்வி எஸ். ஆறுமுகம் தலைமை தாங்கினார்.

கருவிடுத் தொழிலாளருக்கு

சம்பளத்துடன் 3 நாள் லீவு கிடைக்கும்

யாழ்ப்பாணம். வெள்ளி கருவிடுத்தொழில் சம்பள நிர்ணயசபையின் கூட்டம் கடந்த 12-ம் திகதி கருவிடுத் தொழில் கமிஷனர் திரு ஜி. விரக்கோன் தலைமையில் நடைபெற்றபோது சிங்கள தமிழ் புதுவருடம் மேதினம் போயா ஆகிய மூன்று தினங்களுக்கும் கருவிடுத் தொழிலாளருக்கு சம்பளத்துடன் விடுமுறை வழங்க வேண்டுமென்ற தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1000 கருவிடுக்கு 20 ரூபா கூலி வழங்க வேண்டுமென்ற தீர்மானமும் நிறைவேறியது. கூட்டத்தில் இலங்கை கருவிடுத் தொழிலாளர் சங்கத்தின்சார்பில் கி. முருகேசர், ஐக்கிய கருவிடுத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதி திரு ஏ. துரைராஜசிங்கம், திரு க. பொன்னுத்துரை, எக். செல்லையா திரு ம. தியாகராஜா ஆகியோரும் முதலாளிமார் சார்பில் இருவரும் கலந்து கொண்டனர்.

கடலில் மாண்ட

(1-ம்பக்த தொடர்ச்சி)

சடலம் இறந்தவரின் சொந்த இடமான வல்வெட்டித்துறைக்கொண்டு வரப்பட்ட பின்னர் உறவினர் கோவில் கப்பிரண்டனின் உத்தரவுப்படி திருமலையும் இச் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு நேரேயுள்ள கரையோரத்தில் சேர்க்கப் பட்டது.

இம்மரணம் சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையில் இறந்தவருடன் வள்ளத்தில் சென்ற கப்பிரமணியம் சாக்கியமளித்தார்.

தாங்கள் இம்மாதம் 11ம் திகதி மாலை மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றதாகவும் 12ந் திகதி அதிகாலை சுமார் 3 மணியளவில் கரைநோக்கி வந்துகொண்டிருந்த தாகவும் அதேநேரத்தில் எதிரிலிருந்து வந்த கடற்படை வத்திரப்படகு கிட்டவந்து மிகு கூறி அடித் நிற்பாட்டச் சொல்லியதாகவும் நிற்பாட்டியபோது இருவர் கடற்படைப் படகிலிருந்து தங்கள் வள்ளத்தில் பாய்ந்ததாகவும் வள்ளத்தில் ஒரு கூறும் துப்பாக்கியொன்று ஒன்றும் வைத்திருந்ததாகவும் இதேநேரத்தில் ஓடிக் கொண்டிருந்த வள்ளம் காரில் பொறுத்த ஏறிய தென்றும் வள்ளத்தில் நின்ற கடற்படை வீரர்கள் தம்மையும் மனோகரதாஸ், தர்மலிங்கம் ஆகியோரையும் [illegible] அழைத்துக் கொண்டு [illegible] ஆகிய இருந்ததாகவும் சாக்கியங் கறினார். தாங்கள் கரைபோய சிறிதுநேரத்தில் தப்பாக்கி வெடிக்கும் சத்தங்கள் பல கேட்டதாகவும் திரும்பி வள்ளத்துக்குச் சென்றது பயத்தினால் வீடுசென்றுவிட்டதாகச் சொல்லி [illegible] சொல்லியபின்பு அவர்களுடன் சென்ற பொலிஸ் சங்க இலாகா ஆகிய இடங்களில் அறிவித்ததாகவும் அதன் பின்னரே வள்ளத்திலிருந்த வண்ணக்கிளிகுடும்பத்தார் [illegible]

யாழ் நகரில்

பிரமாண்டமான மலிவு விற்பனை!

எமது புதிய வர்த்தக நிறுவன திறப்புவிழாவை முன்னிட்டு 12-6-72 முதல் 12-7-72 வரை பிரமாண்டமான மலிவு விற்பனை நடைபெறுகிறது.

உங்கள் தேவைகளுக்கேற்ற

நவநாகரீக உடைகளை

தெரிவுசெய்ய தவறாதீர்கள்

கணேசானந்தாஸ்

சில்க் பலஸ்

15, நவீன சந்தை — யாழ்ப்பாணம்.

(மிசாரதிக்கு வீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

நீ உன் பகைவனுக்கு அளிக்கத்தகுந்த முதன்மை யான பரிசு - மன்னிப்பு; உனக்குப் போட்டியுள்ளவனுக்குச் - சகிப்புத்தன்மை. நண்பனுக்கு - உன் இதயம், உன் குழந்தைக்கு - மரியாதை" உன் தாய்க்கு - அவள் உன்னைப்பற்றிப் பெருமைப்படத்தக்க ஒழுக்கம் உனக்கு - தன்னையே பெருமை, எல்லாமனிதர்களுக்கும்-தாராள மனப்பான்மை.

—பாக்னோர்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

வெள்ளிக்கிழமை பரிதாபி வருஷம் ஆனி மாதம் 3-ந் திகதி (16-6-72)

புதிய பிரச்னைகள்

கூட்டணி சம்பந்தமான பிரச்னைக்கு பல தீர்க்கப்படாமல் நிலைமை குழம்பிக்கொண்டிருக்கையில் புதிய பிரச்னைகளைப் புகுத்தி நிலைமையை மோசமாக்குவது எல்லோருக்கும் விரோதமானது. தேசியக்கொடிகளைப் பள்ளிக்கூடங்களில் வாரா வாரம் கட்டாயமாக ஏற்றுவது, தேசிய கீதங்களை மாணவர்கள் பாடும்படி செய்வது, தமிழ்ப்பள்ளிக்கூடங்களில் சிங்களம் படிப்பிக்க ஆசிரியர்களை அனுப்பி வைப்பது போன்ற புதிய நடவடிக்கைகளை மத்திய அமைச்சு எடுக்க உத்தேசித்திருக்கின்றதாம். இதில் தவறு எதுவுமில்லையாயினும் இன்று இலங்கையை சூழ்நிலையில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் முதலியவர்களின் சம்மதமும் ஒத்துழைப்புமில்லாமல் மத்திய அமைச்சு ஏகதேசாதிகாரமாக நடவடிக்கை எடுப்பின், பிள்ளைகள் அதற்காக வருந்த வேண்டி ஏற்படும்.

ஏற்கனவே "தரப்படுத்தல்" என்ற நடவடிக்கையை எடுத்ததால் ஏற்கனவே விரோதங்களை இன்னும் வளர்க்கத்தேவையில்லை. அப்பெருந்தவறைப் பிள்ளைகள் உணர்ந்து, அந்த முறையைக் கைவிடுவிக்கிடந்தால் அமைச்சின் ஓர் அறிக்கை தெரிவித்தது. தவறான அந்த முறையை கைவிடுவிட்டது உண்மையாயின் அது வரவேற்கத்தக்கதே. மத்திய அமைச்சு வரும்பொருள் உணர்ந்தால் என்னவோ விரோதங்கள் ஏற்படும் என்பதை முன்கூட்டியே அறிந்து, தவறுகள் ஏற்படாமல் தக்க நடவடிக்கைகளை எடுப்பதே எந்த அமைச்சின் கடமையுமாகும். சில சமயம் தவறுகள் செய்யப்படும்போது வீண் பிடிவாதம் காட்டாமல் திருத்திக் கொள்வது நல்லதே. ஆனால் இதற்கிடையே செய்த தவறுகளால் பொதுமக்களுக்கும் நாடுக்கும், அரசாங்கத்துக்கும்கூட பல தீமைகள் ஏற்பட்டுவிடுவதால், இவ்விஷயங்களில் அமைச்சு மிக மிகக் கவனமாகவும், எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டியது அவசியமாகின்றது.

புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தமிழ்ப் பிரதிநிதிகளின் பலர், மொழிவிஷயம் சரணமாக ஏற்கவில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்களில் பொதுமக்களிடையே இது பற்றி அதிக அதிருப்தி நிலவி வருவதும் அரசாங்கம் அறியாததல்ல. இந்தப் பிரச்னைகளைத் திருப்திகரமாகத் தீர்த்து நாடில் அமைதியையும் ஒற்றுமையையும் நிலைநாட்ட வேண்டிய முக்கியமான தேசியக்கடமை பலருக்கு ஏற்படுகிறது. மேலும் பயங்கரவாத இயக்கத்தின் ஆபத்தையும் சமாளிக்க வேண்டிய பெரும் பொறுப்பும் உள்ளது. இந்நிலையில் பள்ளிக்கூடங்களில் தேசியக்கொடியை ஏற்றி தேசிய கீதங்களைப் பாடும்படி செய்வதாயின், அதனால் புதிய பிரச்னைகள் ஏற்படுமென்றால், அவை தங்களால் சமாளிக்க முடியாதென்றும் கல்லூரி நிர்வாக அதிபர்களிடையே பொதுவாக அச்சம் நிலவுவதாகத் தெரிகிறது. ஆகவே இவ்விஷயமாக மத்திய அமைச்சு புதிதாக என்ன நடவடிக்கை எடுப்பதாயினும், கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் இவர்களைக் கலந்து பேசித்து அவர்களது பூரண சம்மதமும் ஒத்துழைப்பும் கிடைத்தாலே அவை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். அப்படியின்றி அவசரப்பட்டு எடுக்கும் நடவடிக்கைகள் மீண்டும் புதிய தொந்தரவுகளுக்கு இடமளிப்பதாக இருக்கும்.

பெண்ணின் வாயினுள் துணி அடைத்து கொள்ளை

முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு விநாயகர் இரவுவேளையில் வீட்டாரின் புகுந்த திருடர்கள் ஒன்று வீட்டுச்சொத்தைக்காரியின் வாயினுள் சேலையை அடைத்துவிட்டு 6000 ரூபா பெறுமதியான நகைகளையும் ரொக்கம் 3000 ரூபாவையும் கொள்ளையடித்துச்சென்றனர்கள் என முல்லைத்தீவுப் பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பில் இச்சம்பவம் நிகழ்ந்தது. புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சிவசெல்வி என்பவரது வீட்டிலேயே இக்களவு நடைபெற்றது. அப்பெண் சிறுவயதுக்குட்பட்ட ஆண்பிள்ளையுடன் அங்கு வசித்துவருகிறார்.

முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி திரு. மு. கனகரத்தினம் இதுபற்றி விசாரணையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

இப்பத்திரிகை "ஈழநாடு" விலிருந்தே கிருஷ்ணன் தாராள் வாழ்ப்பாணம் வெள்ளவத்தை மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு [ஜூன் மாதம் 16-ம் திகதி] அச்சிடப்பெற்றுவெளியிடப்பட்டது.

ஈழத்தில் வளரும் திருமுறைப்பயிர்

ஐயாறன் எழுதுவது

தமிழகத்தைவிட ஈழத்திலே திருமுறைப் பயிர்கள் வளர்ந்தோங்கி, வருகின்றன. இறைப்பணிகளையே, எதிர்காலத்தில் இங்கிருந்து தமிழகத்துக்கு திருமுறைகளைப் பண்ணுடன் பாடிக்காட்டி பயிற்றுவிக்க பல ஆண்களும் பெண்களுமாக இருப்பதாகச் சென்ற நம்பிக்கை ஏற்படுவதாக உள்ளது!

கலாநிதி ஐந்து வருடங்களுக்கு முன்பாக இந்த மாமன்றத்தில் முயற்சியால் தேவார இசைமணி ராஜசேகரம் தமிழகத்திலிருந்து ஈழம் வந்தார். யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கொழும்பு உள்ளிட்டு ஏழு இடங்களில் திருமுறை வகுப்புகள் நடத்தி பலருக்குப் பயிற்சி அளித்தார். புறக்டர்கள், டாக்டர்கள், ஆசிரியர்கள் நீதவான் உள்ளிட்டு பலர் அவரது மாணவர்கள். 11 வயதிலிருந்து 71 வயது வரையிலுள்ளவர்கள். அவரது மாணவர்களாம்! திருமுறையிலே இவ்வளவு ஆர்வம், தமிழகத்திலும் இல்லை எங்கிறார் திருமுறைக் கலாநிதியான ராஜசேகரம். ஈழத்தில் சுமார் ஆயிரம்பேர் அவரிடம் பயின்றுள்ளதாகத்தெரிகிறது.

தேவார திருமுறைகளை முற்றாகப்பயில ஒருவருக்கு ஒரு ஜன்மம் போதாது பல ஜன்மங்கள் தேவை. என்றாலும் சிறிது காலமாவது அவரிடம் பயிற்சி பெற்று பண்ணுடனே திருமுறைகளைப்பாட வாய்ப்புப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள் அப்படிப் பயின்றவர்களுக்கு பரிசுகளை வைத்து, சான்றிதழ்கள் வழங்க சென்னையிலிருந்து தமிழிசைக் கல்லூரி தேவார ஆசிரியர் வே சோமசுந்தர தேசிகர் அவர்கள் யாழ்ப்பாணம் வந்து பரிசுகளை நடத்திவருகிறார் அவருடன் வித்துவான் நிகியான திருமதி சேவா புஷ்பலீலையும் பரிசுகளை நடத்திவருகிறார்கள்.

யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் மூன்று நாட்கள் திருமுறை விழா நடக்க இருக்கிறது. இந்தியாவிலிருந்து வந்துள்ள சான்றிதழ்கள் வழங்கப்பெறுவதோடு, பரிசுபெற்றவர்களின் பண்ணிசை விருந்து நடக்கவிருப்பதாகவும் அறிகிறேன். ஈழத்திலே திருமுறைப் பயிர்கள் எப்படி செழித்தோங்கி வருகின்றன என்பதை அன்று நேரில் அறியலாம். தவறவிடாதீர்கள்

0 0 0

தமிழகத்திலே தேவாரப் பண் ஆராய்ச்சிகள் நடந்தாலும் மக்களிடையே இப்பாடல்கள் பரவவில்லை. காரணம் பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படாமையே. ஈழத்திலே சென்ற பத்தாண்டுகளுக்கு மேல் சமயம் கட்டாயமாக போதிக்கப்படுவதால் சிறுவர், சிறுமியருக்கும் தேவார திருமுறைப்பாடல்கள் பலமனப்பாடமாகும். முன்னர் நாவலர் பெருமான் ஈழத்திலிருந்த தமிழகம் சென்று அதிகு வரலாற்றுக்கும் தமிழுக்கும் புத்துயிரளித்தார்.

அந்தப்பணி இனியும் தொடர்ந்து நடைபெற வேண்டியுள்ளது தமிழகத்தில் நாதியில்லை அதிகரித்த வரலாற்றுக்குப்பெரும் சோதனைகள் ஏற்பட்டுள்ள இக்காலத்தில் இங்கிருந்து திருமுறை சோஷ்டிகள் அடிக்கடி தமிழகம் சென்று திருமுறைவிருந்தளிப்பின் ஆர்வலர்களுக்கும் இது புத்துணர்ச்சியளிப்பதாகவும் வழிகாட்டுவதாகவும் இருக்கும் தமிழகத்தில் மீண்டும் திருமுறைக்கு புத்துயிர் பெறும்.

0 0

இங்குள்ள ஆலயங்களிலே தேவார திருமுறையை ஓதுதற்கு வேண்டிய நியமிக்க வேண்டுமென்று சென்னையிலிருந்து வந்துள்ள சோமசுந்தர தேசிகர் அவர்கள் கூறியிருக்கிறார்கள் நமது கோயில்களிலே அன்றாடம் திருமுறைகள் ஓதப்பெறுவதுடன் அடிக்கடி பண்ணிசை விருந்துகளுக்கும் ஒழுங்கு செய்யப்பெறவேண்டும் என்பதை கூறியிருக்கிறார்கள்.

0 0

காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீன குருமகாசந்நிதானம் அவர்கள் நாளை 17-ந் திகதி கொழும்பிலிருந்து மலை மார்க்கமாக யாழ்ப்பாணம் வந்து சுவெட்டி நச்சந்தோப்பு பிள்ளையார்கோயில் திருவிழாவில் பத்துநாட்களும் சமய சம்பந்தமான அரிய விஷயங்களைப் பற்றிப்பேசியிருக்கிறார்கள் காலையில் சைவசாத்திரம் பற்றிய வகுப்புகளும் நடைபெறுமென்று தெரிகிறது.

அருள் பொழியும் அன்னை பராசக்தி

— வித்துவான் கு. சின்னத்தம்பி —

[புளியங்கூடல் அம்பாள் ஆலயரதோற்சவம் நாளை நடைபெறுகிறது அதனை யொட்டி இக்கிடுரை பிரசுரமாகிறது.]

அண்டசராசரங்களை அனைத்தையும் ஆக்கியளைப்பது சக்தி. அச்சக்தியில் உதிக்கும் அருளமுதம் உருவமுமானவள் அன்னை பராசக்தி.

பகலில் உடம்பெல்லாம் பால் நிறைந்திருக்கிறது. ஆனால் தொட்டிடமெல்லாம் கண்ணுக்குத் தெரியக்கிடையாது. இவ்வாறே அண்டமெல்லாம் நிறைந்திருக்கிறாள் அன்னைபராசக்தி. உடம்பெல்லாம் நிறைந்திருக்கும் பாலை பசுவின் மடியிற்றான் பெறுகிறோம். அதுபோல அண்டமெல்லாம் நிறைந்திருக்கும் அன்னை பராசக்தியை கோவிலிற்றான் காண்கிறோம் உடுவில் வடிவில்.

மாயவலையில் நாம்

நாம் ஜம்புலன்களாலும் பாசபந்தங்களால் - மும்மலங்களால் கட்டுண்டு கிடக்கிறோம். மனிதன் நான்-எனது என்னும் செருக்காலே பிறவிக்கடலைப் பெருக்க முற்படுகிறான். பற்பல துன்பங்களுக்கு ஆளாகிறான். தவிக்கும் சிறந்துக்கும் சிவமாகிய சக்திக்குமிடையே இருக்கு திரையைத் தடுப்பதிக்கொண்டிருக்கிறான். இவ்வாறே நாம் பாச ஆணவப்பாசு செருக்காலே சக்தியின் அருளிலிருந்து மறந்து உலக பந்தத்திலே முழுகி எரிந்து துன்பப்படுகிறோம். [illegible] இருந்த ஆணவத்தையே [illegible]

அருள்கூட்ட எழுந்துள்ளான்

தீவுப்பகுதியில் வாழ் மக்களுக்கு அருள் கூட்டும் பொருட்டு சக்தி புளியங்கூடலிலிருப்பதியின்கண்ணே கோவில் கொண்டெழுந்தருளியிருக்கிறாள். நெஞ்சம் நெக்கு நெக்கு உருகும் அடியார் உள்ளத்திலே பரமானந்தம் பெருக்கெடுக்க. அவர்கள் குறை தீர்க்கும் வண்ணம் அன்னை எழுந்தருளியுள்ளாள். வயல்கள் நிறைந்த அப்பகுதியின்கண்ணே கோவிலின் மத்தியிலே எழில்மிகு தோற்றத்துடன் அன்னையின் ஆலயம் அமைந்திருக்கிறது.

அந்நியர் ஆக்கிரமிப்பாலே கோவில்கள் அழிக்கப்படும் அந்தோ! இந்த சமயம் பரப்பப்படுவதாயிற்று. ஏழை எளியவர் கூடி அந்தோ! இக்கோயிலை நாடினர். தீவுப்பகுதியிலும் சைவ மதம் குன்றியது. மக்கள் மன்னர் பொருமைக்காற்றாது மதம் மாறினர். இவ்வேளையிற்றான் புளியங்கூடலில் ஒரு குடியேற்றம் நடைபெறவாக அன்னை பராசக்தியின் உருவம் வைத்து வழிபடப்பட்டுவந்தது.

காலஞ் செல்லச் செல்ல அவளது அற்புதங்கள் நாடு எங்கும் பரவின. அடியார் குறை தீர்க்கும் அன்னைக்கு ஆலயம் எடுக்கப்பட்டது) இன்று [illegible] வளர்பிறையே வளர்ந்து உயர்ந்து ஓங்கி நிற்கிறது. சிறந்த சித்திரத் தேர், தெண்ணீர் நிறைந்த தெப்பக்குளம் நறுமணம் தரும் பூஞ்சோலை அன்னதான மடங்கள் தண்ணீர்ப் பந்தல்கள் குறைவறவிளங்குகின்றன. .....

சி. ஐ. டி.

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

அனுப்பியபின்னரே நாடிலிருந்து வெளியேறுவதற்கு அனுமதி வழங்கவேண்டியிருப்பதாக. இதனால் சில தினங்கள் கடுமையாகத் தேவைப்படும் என்றும் இதனால் முன்னர் போல் ஒரு கிழமைக்குள் விண்ணப்பங்களை பரிசீலனை செய்ய முடியாது என்றும் குறைந்தது 10,15 நாட்களுக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பும்படியும் கொள்ளார் டுள்ளனர்.

இளைஞர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஸர் விநாயகமூர்த்தி! சாரதிகள் பிரிவு! எம். தங்கராசா, கே. கிருஷ்ணபிரமணியம், கண்டக்டர்கள்! கே. சின்னையாபிள்ளை, சி. கே. குமாரசாமி! பொறியியல் பகுதி! ச. பி. துரைராஜா, எஸ். சின்னத்தம்பி! காரியாலய ஊழியர்! கே. ராஜரத்தினம்.

இவர்கள் முழுமதியிலும் இந்த டிப்போ ஒன்றிலாவது இவ்வாறு போக்குவரத்தி எல்லாப் பிரிவுகளிலும் உறுப்பினர் தெரிவுப்படுத்தப்பட்டுள்ளதாக இந்த டிப்போ ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org